

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2024) முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் தி.சிவசுப்பிரமணியன் அவர்களின் சென்னை, மேற்கு மாம்பலத்திலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, உடல்நலக்குறைவால் காலமான அவரது தாயார் திருமதி கோமதி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மு.க.தமிழரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, முரசொலி பொது மேலாளர் எஸ்.ராஜசேகரன், ‘தி ரைசிங் சன்’ ஆசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், முரசொலி செய்தி ஆசிரியர்கள் கு.சேது, இள.மதியழகன் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.

விடுமுறை எதிரொலி:

# சென்னையில் இருந்து கூடுதல் பேருந்துகள் இயக்கம்!

சென்னை, அக். 11 -

ஆயுத பூஜை மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சென்னையில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; ஆயுத பூஜை பண்டிகை மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு இன்று சென்னையிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 880 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 265 பேருந்துகள் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்திலிருந்து 110 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

# ஒரு கேள்வி; ஒரு பதில்!

**கேள்வி:** அரசு நிகழ்ச்சிகளுக்கு தி.மு.க. சின்னம் பொறித்த ‘டி.சர்ட்’ அணிந்து துணை முதலமைச்சர் கலந்து கொண்டு மரபு மீறி செயல்படுவதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளாரே?

**பதில்:** **கருப்பு, வெள்ளை, சிகப்பு பார்டர் பொறித்த கட்சிச் சின்ன கரை வேட்டிகளை அணிந்து அவருடைய கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதல் எடப்பாடி பழனிச்சாமி வரை முதலமைச்சர்களாக பல அரசு விழாக்களில் கலந்துகொண்டதும் மரபு மீறலா? உ.பி.யில் காவி உடையிலேயே ஒரு முதல்வர் உலா வருகிறாரே; அது எத்தகையச் செயல்? விளக்குவாரா ஜெயக்குமார்?**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும் – அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் – தலைசிறந்த எழுத்தாளர் – பத்திரிகையாளருமான**

# முரசொலி செல்வம் மறைவு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும் - அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு.முரசொலி செல்வம் அவர்கள் இன்று (10.10.2024) காலை மறைவெய்தினார்.

கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகத்தின் கொள்கை பரப்பியவரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றவருமான திரு.முரசொலி செல்வம் அவர்களின் மறைவினையொட்டி தமிழகம் முழுவதும் இன்று (10.10.2024) முதல் மூன்று நாட்களுக்கு கழக அமைப்புகள் அனைத்தும் கழகக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள் : 10.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களுக்குத் தேர்வான

# 125 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக். 11 –

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2024) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 83 நபர்களுக்கும், வேளாண்மை துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையிலும் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் பெருமக்களின் வருவா யினை பன்மடங்காக உயர்த்திட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

வேளாண் துறை சார்ந்த பணி களை விரைந்து மேற்கொள்ளவும், அரசின் வேளாண் திட்டங்கள் கடைக்கோடி விவசாயிகளுக்கும் சென்றடையும் வகையிலும், வேளாண்மை – உழவர் நலத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அவ்வகையில், இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இந்நாள்வரை வோண்மை – உழவர் நலத்துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக, பல்வேறு வகையான தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 1714 நபர்களுக்கும், பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் 223 நபர்களுக்கும், என மொத்தம் 1937 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கும், பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், ஆய்வக உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 5 நபர்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்த

# அரியானா - ஜம்மு காஷ்மீர் மாநில மக்களுக்கு நன்றி!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி சமூக வலைதளப் பதிவு!

**புதுடெல்லி, அக். 11 - காங்கிரஸ் முன்னணி தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-**



அரியானா மற்றும் ஜம்மு –காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டுள்ளார். ஜம்மு–காஷ்மீரில் இந்தியா கூட்டணிக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றி, இந்தியாவுக்கும், நாட்டின் அரசியலமைப்புக்கும், ஜனநாயகத்துக்கும் கிடைத்த வெற்றி என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரியானா தேர்தல் முடிவு குறித்து ஆராயப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ள ராகுல்காந்தி, பல்வேறு மாநில சட்டப்பேரவை தேர்தல்களை தொடர்ந்து, தற்போது அரியானா சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை யிலும் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், இதுகுறித்து தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடைசி வரை பா.ஜ.க.வுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தும் அளவுக்கு வாக்களித்த அரியானா மாநில வாக்காளர்களுக்கும், தேர்தல் பணியாற்றிய கட்சியினருக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

அரியானா மாநில மக்களின் உரிமைக்காக தொடர்ந்து போராடுவோம் என தெரிவித்துள்ள ராகுல்காந்தி, சமூக, பொருளாதார நீதிக்காகவும், உண்மைக்காவும் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்று பதிவிட்டுள்ளார்.

